# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.67/மா/2024**

**நாள்: 15.11.2024**

B. விஜயகுமார் சென்னை .......... முறையீட்டு மனுதாரர்கள்
மற்றும் R. செல்வகுமார்,
சென்னை.

மண்டல அலுவலர், .......... எதிர் மனுதாரர்
மண்டலம் 5,
பெரு நகர சென்னை மாநகராட்சி.

சென்னை தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு, கதவு எண்.14/15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு B. விஜயகுமார் மற்றும் சென்னை, அன்னை சத்தியா நகர், இராஜாஜி தெரு, கதவு எண்.152 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.செல்வகுமார் என்பவர்களின் 12.03.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2024 அன்று பெறப்பட்டு, 67/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது,

## ஆணை

சென்னை தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சால்ட் குறுக்கு தெரு, கதவு எண். 14/15 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.B.விஜயகுமார் மற்றும் சென்னை அன்னை சத்தியா நகர், இராஜாஜி தெரு, கதவு எண்.152 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.செல்வகுமார் என்பவர்கள் 12.03.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளனர்.

சென்னையில் பெரும்பான்மையான பூங்காக்கள் முறையான பராமரிப்பு இல்லாமல் பாழடைந்து இருக்கிறது என்றும், இவ்வாறான பூங்காக்களை ஒப்பந்தம் எடுக்கும் நபர்கள் பூங்காவை சரிவர பராமரிப்பது இல்லையென்றும், அதில் ஒன்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, தலைமைச்செயலக பூங்காவை குத்தகைக்கு எடுத்த ஒப்பந்தகாரர், ஒப்பந்தத்தில் இருக்கும் வழிமுறைகளை பின்பற்றாமல் பூங்காவை பாழடைந்த சூழ்நிலைக்கு தள்ளிவிட்டார் எனவும், இது தொடர்பாக கடந்த ஒரு ஆண்டாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புகார் மனு அளித்து வருகிறேன். ஆனால் ஒப்பந்ததாரர்களும், சென்னை மாநகராட்சி அலுவலர்களும் கைகோர்த்துக்கொண்டு பூங்காவை சரிவர கவனிப்பதில்லை. மேலும் ஒப்பந்தத்தில் 10 பணியாளர்கள் இருப்பதாக அறிவிப்பு பலகை வைத்துள்ளார்கள். ஆனால் உண்மையில் இரண்டு

அல்லது மூன்று பணியாளர்களே உள்ளனர். முறையான காவலர்கள், பிளம்பர்கள் இல்லை. ஏனவே ஐயா அவர்கள் இந்த புகாரினை விசாரணைக்கு ஏற்று உரிய அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கவும், பூங்காவினை சீர் அமைக்கவும் உரிய உத்திரவினை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளனர்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 29.7.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்5ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலர் 20.09.2024 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, பகுதி 134, கோட்டம் 60க்குட்பட்ட தலைமைச்செயலக பூங்காவினை பராமரிக்க ஒப்பந்ததாரர் திரு எம். மகேஷ் என்பவருக்கு பணியாணை வழங்கப்பட்டு மதிப்பீடு பட்டியலில் உள்ளவாறு பணியாளர்களை நியமித்து அவர்களின் வருகை பதிவேடு உயர் அலுவலர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு அதன் பிறகே ஒப்பந்ததாரருக்கு பண பட்டுவாடா மேற்கொள்ளப்பட்டது என்றும், மேலும் தினந்தோறும் பூங்காவினை ஆய்வு மேற்கொண்டு உடனுக்குடன் புகார்கள் நிவர்த்தி செய்யப்பட்டு வந்துள்ளது என்றும் கடந்த டிசம்பர் 2023–ல் அவரது ஒப்பந்த காலம் முடிவடைந்தது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் அடுத்த நிதியாண்டிற்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு பட்டியல் தயார் செய்யப்பட்டு ஒப்பம் கோரும் காலம் தாமதம் ஆனதால் மேற்கண்ட பூங்காவினை முன்னதாக இருந்த ஒப்பந்ததாரர் மூலமே பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது எனவும், தற்பொழுது பூங்கா பராமரிப்பு பணிகளுக்கான ஒப்பம் கோரப்பட்டு திரு ஜெனிஸ்டிக் கார்ப்ரேட் சர்வீஸ் என்ற நிறுவனம் ஒப்பந்தத்தினை மேற்கொண்டு 16.7.2024 முதல் பூங்காவினை பராமரிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும், மேலும் பூங்காவனது பொது மக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையிலும், அடிப்படை உட்கட்டமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்து, அதற்கான புகைப்படங்களையும் இணைத்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் 04.11.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர்கள் 04.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“சென்னையில் பெரும்பான்மையான பூங்காக்கள் முறையான பராமரிப்பு இல்லாமல் பாழடைந்து இருக்கிறது. இந்த பூங்காவை ஒப்பந்தம் எடுக்கும் நபர்கள் பூங்காவை சரிவர பராமரிப்பது இல்லை. அதில் மண்டலம்–5, தலைமைச் செயலக பூங்காவை குத்தகைக்கு எடுத்த ஒப்பந்ததாரர் அவர்கள் ஒப்பந்தத்தில் இருக்கும் வழிமுறையை பின்பற்றாமல் பூங்காவை பாழடைந்த சூழ்நிலைக்கு தள்ளிவிட்டார். நான் பூங்கா தொடர்பாக கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக மாநகராட்சிக்கு புகார் அளித்து வருகிறேன். ஆனால் ஒப்பந்ததாரர்களும், மாநகராட்சி அதிகாரிகளும் கைகோர்த்துக் கொண்டு பூங்காவை சரிவர கவனிப்பதில்லை. ஒப்பந்தத்தில் 10 பணியாளர்கள் இருப்பதாக அறிவிப்பு பலகை வைத்துள்ளார்கள். ஆனால் நிஜத்தில் இரண்டு

மூன்று பணியாளர்களே உள்ளார்கள். முறையான காவலர்கள், பிளம்பர்கள் பூங்காவிற்கு இல்லை. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஆண்டுக்கு ஒருமுறை, மாதத்துக்கு ஒருமுறையும் ஒப்பந்ததாரர், பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் சம்பளம் என்று பெற்றுக்கொண்டு அவர்கள் தமது கடமையை சரியாக செய்யவில்லை.

எனவே உயர்திரு ஐயா அவர்கள் இந்த புகாரினை விசாரணைக்கு ஏற்று பின்வரும் கோரிக்கைகள் குறித்து உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(1) மேற்கண்ட பூங்காவில் புற்கள் அதிக அளவில் வளர்ந்துள்ளது.

(2) மேற்கண்ட பூங்காவில் போதிய மின் விளக்குகள் இல்லை மற்றும் குடிநீர் வசதி இல்லை.

3) மேற்கண்ட பூங்காவில் குழந்தைகள் விளையாடும் பகுதியில் விளையாட்டு உபகரணங்கள் சரிவர பராமரிக்கப்படுவதில்லை மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் பராமரிக்கப்படுவதில்லை.

4) பூங்காவில் கழிவறை வசதியில்லை.

5) மேற்கண்ட பூங்காவில் கால்நடைகள் நுழைவதை தடுக்கவும், சிசி டிவி கேமரா பொருத்தவும் கேட்டுக்கொள்கிறோம்.

6) மேலும் கடந்த 12.10.2024 அன்று பூங்காவில் ஒருவர் தூக்குமாட்டி இறந்து விட்டார். சரியான கண்காணிப்பு இன்மையால் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன.

7) ஒப்பந்தத்தில் இருக்கும் வழிமுறைகளை பின்பற்றி பூங்காவை சீர் அமைத்து பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் உரிய உத்திரவினை பிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

6) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்5ன் உதவிப்பொறியாளர் 04.11.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, பகுதி 13, கோட்டம் 60க்கு உட்பட்ட தலைமைச் செயலக பூங்காவினை பராமரிக்க ஒப்பந்ததாரர் திரு.M.மகேஷ் என்பவருக்கு பணியாணை வழங்கப்பட்டு மதிப்பீடு பட்டியலில் உள்ளவாறு பணியாளர்களை நியமித்து அவர்களின் வருகை பதிவேடு உயர் அலுவலர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு அதன் பிறகே ஒப்பந்ததாரருக்கு பண பட்டுவாடா மேற்கொள்ளப்பட்டது. தினந்தோறும் பூங்காவினை ஆய்வு செய்து உடனுக்குடன் புகார்கள் நிவர்த்தி செய்யப்பட்டு வந்துள்ளது. கடந்த டிசம்பர் 2023ல் அவரது ஒப்பந்த காலம் முடிவடைந்து பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் அடுத்த நிதியாண்டிற்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு பட்டியல் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தம் கோரும் காலம் தாமதம் ஆனதால் பூங்காவினை முன்னதாக இருந்த ஒப்பந்ததாரர் மூலமாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்சமயம் பூங்கா பராமரிப்பு பணிகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு திரு.ஜெனிஸ்டிக் கார்ப்பரேட் சர்வீஸ் என்ற நிறுவனம் ஒப்பந்தம் மேற்கொண்டு 16.07.2024 முதல் பூங்காவினை பராமரிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. தற்சமயம் பூங்கா பொது மக்கள் பயன்பாட்டில் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. பூங்காவினுள் அடிப்படை உட்கட்டமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) மேற்கண்ட பூங்காவிற்கு 50மீட்டர் தொலைவில் கழிவறை உள்ளது.

2) மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. எரியாத மின்விளக்குகள் கண்டறியப்பட்டு புதிதாக பொருத்தப்படும்.

3) முறையான பணியாளர்கள் அமர்த்தப்பட்டு பூங்கா பராமரிக்கப்பட்டு வருகிறது.

4) குடிநீர் டேங்க் அமைக்கப்பட்டு குடிநீர் வாரியம் மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு வருகிறது.

5) தலைமைச் செயலகம் எதிரே உள்ள நுழைவாயிலில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது.

6) மாடுகள் பூங்காவில் நுழையாமல் இருக்க வேலி அமைக்கப்படும்.

7) துர்மரணம் ஏற்பட்டது குறித்து சென்னை பெருநகர மாநகராட்சியில் தகவல் ஏதுமில்லை. அது குறித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் பூங்கா பராமரிப்பின்போது மேற்கொண்ட புகைப்படங்களும், பணியாளர்களின் வருகைப்பதிவேட்டின் நகலையும் இம்முறைமன்றத்தில் முன் சமர்ப்பிக்கின்றேன்.. வருங்காலங்களில் மேற்கண்ட பூங்கா முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

7) மனுதாரர்களின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் மண்டல அலுவரின் அறிக்கை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்5ன் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

8) மனுதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–5, பகுதி13, கோட்டம் 60–க்கு உட்பட்ட தலைமைச்செயலக பூங்காவினை ஒப்பந்ததாரர் சரிவர பாராமரிக்காமலும், முறையான பணியாளர்கள், பிளம்பர்கள், காவலர்கள் நியமிக்காமலும், பாழடைந்த சூழ்நிலைக்கு தள்ளிவிட்டார் என தெரிவித்து, அப்பூங்காவில், மின்விளக்குகள், குடிநீர் வசதி, பூங்காவில் குழந்தைகள் விளையாட உரிய உபகரணங்கள் அமைக்கவும், கழிவறை ஏற்படுத்தவும், கால்நடைகள் நுழையாவண்ணம் வேலி அமைக்கவும், ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட வழிமுறைகளை பின்பற்றி பூங்காவினை முறையாக பராமரிக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் அலுவலர்களுக்கு உரிய உத்திரவினை பிறப்பிக்குமாறு கோரியுள்ளனர்.

9) மேற்கண்ட பூங்காவினை பராமரிக்க ஒப்பந்ததாரர் திரு எம். மகேஷ் என்பவருக்கு பணியாணை வழங்கப்பட்டு மதிப்பீடு பட்டியலில் உள்ளவாறு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவருடைய ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர் திரு ஜெனிஸ்டிக் கார்ப்பரேட் சர்வீஸ் என்ற நிறவனத்திற்கு ஒப்பந்தம் மேற்கொண்டு 16.7.2024 முதல் பூங்காவினை பாராமரிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர் என்பதும், கழிவறை பூங்காவிற்கு 50 மீட்டர் தொலைவில் உள்ளது என்பதும், போதிய மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது என்றும், எரியாத மின்விளக்குகளுக்கு பதிலாக புதிய மின்விளக்குகள் பொருத்தப்படும் என்பதும், குடிநீர்வாரியம் மூலம் குடிநீர் டேங்கில் குடிநீர் நிரப்பப்பட்டு வருகிறது என்பதும், கால்நடைகள் நுழையாவண்ணம் வேலி அமைக்கப்படும் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவரின் அறிக்கை மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

எனவே, மனுதாரர் கோரியவாறு மின்விளக்குகள், குடிநீர் வசதி, மற்றும் ஒப்பந்தப்படி முறையான பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளார்களா, கால்நடைகளை தடுக்கும் வகையில் வேலி அமைக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவிப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு வேலி அமைக்கவும், வருங்காலங்களில் மேற்கண்ட பூங்கா முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பனவற்றை தொடர்ந்து கண்காணித்து குறைகள் ஏற்படாவண்ணம் பூங்காவினை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில், நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு B விஜயகுமார்,
எண்.14/15 சால்ட் குறுக்கு தெரு,
துர்காதேவி நகர், தண்டையார்பேட்டை,
சென்னை 600 081.

2) திரு R செல்வகுமார்,
எண்.152, அன்னை சத்தியா நகர்,
"B" பகுதி, இராஜாஜி சாலை,
சென்னை 600 009.

3) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

4) மண்டல அலுவலர்,
மண்டலம் 5,
பெருநகர சென்னை மாநகராட்சி,
61 பேசின் பிரிட்ஜ் சாலை,
இராயபுரம், சென்னை 600 021.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028

6) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).